ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
திகதி 2025.03.19

## டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் மூலம் எதிர்காலத்தை வடிவமைப்போம்: நுவரெலிய மாவட்டத்தில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை இலங்கை மத்திய வங்கி ஊக்குவிக்கின்றது

இலங்கை மத்திய வங்கி அதன் 2025ஆம் ஆண்டிற்கான மற்றுமொரு டிஜிட்டல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு பிரச்சாரத்தை நுவரெலியாவில் 2025 மாச்சு 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர். முனைவர். நந்தலால் வீரசிங்க அவர்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கின்றது.

கிரகரி லேக் வாகனத் தரிப்பிடத்தில் ஏற்பாடுசெய்யபட்டுள்ள இந்நிகழ்வில் வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கம்பனிகள் அத்துடன் நுண்பாக, சிறிய அதேபோன்று நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் போன்ற இ-பண பணி வழங்குநர்கள் உள்ளடங்கலாக செல்லிட கொடுப்பனவு செயலி பணி வழங்குநர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில், பொதுமக்கள் தமது நாளாந்த தேவைகளுக்கு டிஜிட்டல் ரீதியிலான கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இயலச்செய்வதற்கு செல்லிட கொடுப்பனவு செயலிகளுக்காக பதிவுசெய்வதற்கு வசதியேற்படுத்திக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வகையிலான கொடுப்பனவுகள் காசைப் பயன்படுத்துவதுடன் ஒப்பிடுகையில் பாதுகாப்பனவை, வசதியானவை அத்துடன் குறைந்த செலவுமிக்கவையாகும். இந்நிகழ்வில் பங்கேற்கின்ற விற்பனையாளர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் பணிகள் மீதான விசேட விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு LANKAQR கொடுப்பனவு முறையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினையும் பொதுமக்கள் பெற்றுக்கொள்வர்.

கிடைக்கப்பெறுகின்ற நவீன டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் பற்றி தமது விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் தமது செல்லிட தொலைபேசிகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்கும் இவ்வாய்ப்பினை பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு இலங்கை மத்திய வங்கி அழைப்பு விடுக்கின்றது.